மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்

**முன்னிலை : திரு.சி. சிவக்குமார் , பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான்**

2048 திருவள்ளுவராண்டு ஹேவிளம்பி வருடம் ஆடி மாதம் 04ம் நாள்

2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் நாள் வியாழக்கிழமை

CC.01/2017

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்
வலங்கைமான் காவல் நிலையம்,
வலங்கைமான்..
குற்ற எண்.05/2016 .......குற்றமுறையீட்டாளர்

/ எதிர்/

1. இளவரசன்,32/16
   த/பெ அம்பிகாபதி,
   குச்சிப்பாளைய தெரு,
   மாணிக்கமங்கலம்.
2. இளம்வழுதி, 30/16
   த/பெ அம்பிகாபதி,
   குச்சிப்பாளைய தெரு,
   மாணிக்கமங்கலம்.
3. அம்பிகாபதி, 52/16
   த/பெ கலியபெருமாள்,
   குச்சிப்பாளைய தெரு,
   மாணிக்கமங்கலம். ...எதிரிகள்

WEB COPY

இவ்வழக்கானது கடந்த 25.01.2017ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 12.07.2017ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையீட்டாளர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை 1 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு. A. சந்தோஷ் பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இன்று ( 20.07.2017) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

## தீர்ப்புரை

கடந்த 02.01.2016ம் தேதி மதியம் சுமார் 12.15 மணியளவில் சாட்சி 1ன் வீட்டு பொழியில் உள்ள வேப்பமரத்தை இவ்வழக்கின் 1வது எதிரி வெட்டும்போது, சாட்சி 1, 2, 3 ஆகியோர்

மரத்தை ஏன் வெட்டுறே? என்று கேட்டதற்கு எதிரிகள் மூவரும் குச்சிக்காரி மவனே, தேவடியா மவனே நாங்க அப்படித்தான் வெட்டுவோம் என ஆபாசமாக திட்டியும் மேலும், எதிரி 1 ஆனவர் தன் கையில் வைத்திருந்த அரிவாளால் சாட்சி 2ஐ வீசித் தாக்க முற்படும்போது அந்த அரிவாள் சாட்சி 1ன் வலது முன் காலில் வெட்டி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 2 வது எதிரி தனது கையில் வைத்திருந்த கருவை கட்டையால் சாட்சி 1ன் இடுப்பில் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும், 3வது எதிரி சாட்சி 2, 3 ஆகியவர்களை கருவை கட்டையால் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும், மேலும் எதிரிகள் மூவரும் சேர்ந்து அரிவாள், கட்டைகளை காண்பித்து உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்ததாகவும் எனவே, 1வது எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)ன் கீழும், 2, 3வது எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)ன் கீழும், தண்டிக்கத்தக்கவர்கள் என்று குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

WEB COPY

2.. எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும், எதிரிகளுக்கு கு.வி.மு.ச. பிரிவு 207ன்படி வழக்காவணங்களின் நகல்களை இலவசமாக வழங்கி, எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவ, எதிரிகள் குற்றத்தை மறுத்தார்கள். பின்னிட்டு ஆவணங்களை பரிசீலித்து 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)ன் கீழும், 2, 3வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)ன் கீழும்குற்றச்சாட்டுக்கள் வனைந்து, வாசித்து, விளக்கி வினவியபோது, எதிரிகள் குற்றச்சாட்டுக்களை மறுத்த காரணத்தினால் அரசுத்தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதில் அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.11 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>3. அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும், புலனாகும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்.</u>**

அ.சா.1 தனது சாட்சியத்தில். இவ்வழக்கின் புகார்தாரர் ஆனந்தவள்ளி தனது அம்மா என்றும், எதிரிகளைத் தெரியும் என்றும், இன்றிலிருந்து சுமார் 7 மாதங்களுக்கு முன்பு சுமார் 11 மணியளவில் தான் வீட்டிற்கு வந்த போது இளவரசன் தனது மனைவி தாமரைசெல்வியை கொச்சை வார்த்தைகளால் பேசிக்கொண்டிருந்தார். தான் அவரிடம் ஏன் இவ்வாறு சத்தம் போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரி இளவரசன் தனது பொழியில் இருந்த தனக்குச் சொந்தமான வேப்பமரத்தை வெட்டிக்கொண்டிருந்தார் என்றும்,

தான் ஏன் வெட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரி அம்பிகாபதி மரத்தையும் வெட்டுங்கடா அவனையும் வெட்டுங்கடா வெட்டிவிட்டு ஜெயிலுக்கு போகலாம் என்று கூறியதாகவும், எதிரி இளவரசன் என்னை வெட்ட வந்த போது தனது அம்மாவின் இடது காலில் பட்டு ரத்தக் காயம் ஏற்பட்டதாகவும், எதிரி இளம்வழுதி தனது கையில் வைத்திருந்த கல்லை தன் மீது தூக்கி எறிந்ததாகவும், தனது இடது தோளில் பட்டு தனக்கு வலி ஏற்பட்டதாகவும், எதிரிகள் மூவரும் கொச்சை வார்த்தைகளால் தங்களை திட்டியதாகவும், காயம்பட்ட தனது தாயாரை நீடாமங்கலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சிகிச்சைக்காக சேர்த்ததாகவும், அங்கிருந்து மேல்சிகிச்கைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்ததாகவும், அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த தனது தாயாரை போலீசார் விசாரித்தார்கள் என்றும், நடந்த சம்பவம் பற்றி தனது தாயார் போலீசாரிடம் கூறியதாகவும், புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தனது தாயாருடையது தான் என்றும், தனது தாயார் கொடுத்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆகும் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2 தனது சாட்சியத்தில் தங்கள் குடும்பத்திற்கும் எதிரிகளின் குடும்பத்திற்கும் இடப்பிரச்சனை என்றும், இன்றிலிருந்து சுமார் 5 மாதங்களுக்கு முன்பு மதியம் 11 மணியளவில் தங்கள் கொல்லையில் இருந்த தங்களுக்கு சொந்தமான வேப்பமரத்தை எதிரி வெட்டியதாகவும், தான் எதிரி இளவரசனிடம் ஏன் எங்கள் மரத்தை வெட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு அதற்கு எதிரி இளவரசன் அசிங்கமான வார்த்தைகளால் பேசி திமிரெடுத்து நிற்கிறாயா என்று கேட்டதாகவும், இச்சம்பவம் நடந்து கொண்டிருந்த போது தனது கணவர் வயலில் இருந்து வந்து விட்டார் என்றும், தனது கணவர் இளவரசனிடம் ஏன் மரத்தை வெட்டுகிறாய் ஏன் இப்படி பேசுகிறாய் என்று கேட்டதாகவும், அதற்கு எதிரி அம்பிகாபதி தனது கணவரை வெட்டுடா என்று இளவரசனிடம் கூறியதாகவும், எதிரிகள் தனது கணவரை தாக்க முற்படும் போது தனது மாமியார் குறுக்கே தடுக்க வந்தபோது தனது கணவரை தாக்குவதற்காக வீசிய அருவாள் தனது மாமியார் இடது காலில் பட்டு காயம் ஏற்பட்டது என்றும், தனது மாமியாரை நீடாமங்கலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சிகிச்சைக்காக சேர்த்து அங்கிருந்து மேல்சிகிச்கைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

WEB COPY

அ.சா.3 தனது சாட்சியத்தில் இன்றிலிருந்து சுமார் 1 மாதத்திற்கு முன்பு மதியம் 11 மணியளவில் தான் தங்கள் ஊரில் உள்ள ரேசன் கடையில் அரிசி வாங்கிவிட்டு வீட்டிற்கு வந்துகொண்டிருந்த போது அ.சா1க்கும், எதிரிகளுக்கும் சண்டை நடந்து கொண்டிருந்ததாகவும், தான் சண்டையை

விலக்கிவிட்டபோது ஆனந்தவள்ளிக்கு காலில் ரத்தம் வந்துகொண்டிருந்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.4 தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள 2வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், மேற்படி கையொப்பத்தை குச்சிபாளையத்தில் சண்டைக்கு மறுநாள் போட்டதாகவும், எதற்காக என்று தனக்கு தெரியாது என்றும், பார்வை மகசரிலுள்ள 2வது கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.2 ஆகும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

*அ.சா.5 தனது சாட்சியத்தில்* கடந்த 02.01.2016 அன்று பகல் 12.00 மணியளவில் தான் தனது வீட்டில் இருந்தபோது அம்பிகாவதி, இளவரசன், இளம்வழுதி மற்றும் தாமரைச்செல்வி ஆகியோர் பேசிக்கொணடிருந்தார்கள் என்றும், தான் கருவுற்றிருந்ததால் அதிக நேரம் நிற்க முடியாமல் வீட்டிற்கு வந்துவிட்டதாகவும், அப்போது சத்தம் கேட்டு வெளியில் வந்து பார்த்தபோது பாட்டி கீழே விழுந்ததில் அவருக்கு வலது காலில் இரத்தம் வந்தது என்றும், எப்படி விழந்தார் என்பது தனக்கு தெரியாது அதன் பிறகு ஆனந்தவள்ளியை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

WEB COPY

*அ.சா.6 தனது சாட்சியத்தில் கடந்த* 02.01.2016 அன்று மதியம் 12.00 மணியளவில் தான் வீட்டில் சமைத்துக்கொண்டிருந்தபோது சத்தம் கேட்டு ஓடிப்போய் பார்த்தபோது அம்பிகாவதி, சின்னையா, தாமரைச்செல்வி ஆகியோர் தள்ளிக்கொண்டிருந்தார்கள் என்றும், தான் போய் விலக்கிவிட்டதாவும், தனக்கு என்ன நடந்தது என்று தெரியாது என்றும், ஆனந்தவள்ளி கீழே கிடந்த கல்லில் அடிப்பட்டதாக சொன்னார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

*அ.சா.7* கடந்த 07.01.2016 அன்று காலை 8.00 மணியளவில் தான் வேலை பாத்துவிட்டு வந்துகொண்டிருந்தபோது அம்பிகாவதி குடும்பத்திற்கும் சின்னயைா குடும்பத்திற்கும் ஏற்பட்ட பிரச்சினை தொடர்பாக வலங்கைமான் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றம் பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும், அதில் தானும், ஜெயராமனும் சாட்சி கையெழுத்து செய்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆகும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

*அ.சா.8 உதவி மருத்துவர் தனது சாட்சயத்தில்* கடந்த 02.01.2016ம் தேதி மதியம் பணியில் இருந்தபோது ஆனந்தவள்ளி, என்பவர் மூனறு தெரிந்த நபர்களால் அவரை தாக்கியதாக கூறி தன்னிடம் மருத்துவ பரிசோதனைக்காக வந்தார் என்றும், அவரை விசாரித்ததில் 3 தெரிந்த நபர்கள் அரிவாள் மற்றும் கட்டையால் மதியம் 12.00 மணியில் அவரது வீட்டின் பின்பக்கம் வைத்து அடித்ததாக கூறியவரை உள்நோயாளியாக அனுமதித்து பரிசோதித்ததில் அவருக்கு ஏறபட்ட காயங்கள் அவருக்கு இடது காலில் வெட்டுக்காயம் 5 x 0.1 செமீ அளவிற்கு வெட்டுக்காயமும், முதுகு தண்டுவட பகுதியில் வலி இருந்ததாக தன்னிடம் கூறியதாகவும், அவரை பரிசோதித்து பின்னர் முதலுதவி செய்து பின்னர் மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், அவருக்கு தான் வழங்கிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.4 என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

*அ.சா.9 தனது சாட்சியத்தில்.* கடந்த 02.01.2016ம் தேதியன்று மதியம் 2.00 மணியளவில் பணியில் இருந்த போது நீடாமங்கலம் அரசு மருத்துவமனையில் இருந்து பரிந்துரை செய்யப்பட்டு சிகிச்சைக்கு வந்த சுமார் 56 வயது மதிக்கத்தக்க ஆனந்தவள்ளி என்ற நபரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்து சிகிச்சையளித்ததில் அவருக்கு முழங்காலுக்கு கீழே 15 x 1.5 செமீ அளவில் தையலிடப்பட்ட ஒரு காயம் இருந்ததாகவும், மேற்படி நபர் முதுகு வலி என்று தெரிவித்ததாகவும், மேற்படி காயத்தின் தன்மையை பரிசோதித்து சிறு காயம் என்று சான்று வழங்கியதாகவும், தான் வழங்கிய அந்த காயச்சான்றிதழுடன் கூடிய விடுவிப்பு அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆகும் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

WEB COPY

*அ.சா.10 சிறப்பு உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில்* கடந்த 06.01.2016ம் தேதி பணியில் இருந்த போது தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலைப் பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த மாணிக்கமங்கலம் கிராமம் குச்சிப்பாளையத்தைச் சேர்ந்த ஆனந்தவள்ளி என்பவரிடம் வாக்குமூலம் பெற்று காவல் நிலையம் வந்து நிலையக் குற்ற எண். 5/2016 ச/பி 294(பி) 323, 324 , 506(2) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.6 ஆகும் என்றும், பின்னர் 07.01.2016ம் தேதி சம்பவயிடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அந்த மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.7 ஆகும் என்றும், பின்னர் சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, தனது

விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரிகளை தேடியதில் எதிரிகள் நீதிமன்ற பிணையில் சென்றுவிட்டார்கள் என்றும், இத்துடன் தனது விசாரணையை முடித்து மேல்விசாரணைக்காக ஆய்வாளா் வசம் வழக்குக் கோப்பினை ஒப்படைத்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளாா்

*அ.சா.11* ஆய்வாளா் தனது சாட்சியத்தில் கடந்த 02.01.2016ம் தேதி வலங்கைமான் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளா் முத்துகிருஷ்ணன் என்பவா் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் கட்ட விசாரணை முடித்து தன்னிடம் ஒப்படைத்த வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்கு எடுத்துகொண்டு சாட்சிகளை மறுவிசாரணை செய்த போது சிறப்பு உதவி ஆய்வாளரிடம் கூறிய அதே விபரங்களை தன்னிடம் கூறியதால் தான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றும், மேலும் காயம்பட்ட புகாா்தாரா் ஆனந்தவள்ளிக்கு நீடாமங்கலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்து தஞ்சாவூா் மருத்துவக்கல்லூாி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு அனுப்பி வைத்த நீடாமங்கலம் அரசு உதவி மருத்துவா் காிகாலன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றதாகவும், காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்த அரசு மருத்துவா் சையது ராஜ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, காயச்சான்று பெற்றதாகவும், இத்துடன் தனது விசாரணையை முடித்து, கடந்த 05.07.2016ம் தேதி எதிரிகள் மீது இதச 294(பி), 323, 324, 506(2) பிாிவுகளின் கீழ் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளாா்.

WEB COPY

6. அரசுத் தரப்பு சாட்சியம் அ.சா.11டன் முடித்துக்கொள்ளப்பட்டு அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான பகுதிகள் குறித்து கு.வி.மு.ச. பிாிவு 313 (1)(ஆ)ன் கீழ் வினவியபோது, எதிரிகள் அவை பொய், என்றும், இவ்வழக்கு பொய்வழக்கு என்றும், தங்களது தரப்பில் விசாாிக்க சாட்சிகள் இல்லை என்றும் பதிலளித்தாகள். எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இரு தரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது.

**4. இவ்வழக்கில் தீா்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**தீா்வு**

5. அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞா் அ.சா.1 முதல் 3 சாட்சிகள் மற்றும் 8 முதல் 11 சாட்சிகள் மூலமாக எதிாி மீதான குற்றம் நிரூபணம் செய்யப்பபட்டுள்ளதாகவும் எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கிட வேண்டும் என்றும் வாதிட்டாா்.

6. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அ.சா.1 முதல் 3 வரையுள்ள சாட்சிகள் ஒன்றுக்கொன்று முரணாக சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லப்படும் அ.சா.5, 6 ஆகியோர் சம்பவத்தைப் பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்று, அரசுத்தரப்பு வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும் எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்,.

7. கடந்த 02.01.2016ம் தேதி மதியம் சுமார் 12.15 மணியளவில் பட்டியல் சாட்சி 1ன் வீட்டு பொழியல் உள்ள வேப்பமரத்தை இவ்வழக்கின் 1வது எதிரி வெட்டும்போது, பட்டியல் சாட்சி 1, மற்றும் அ.சா.1, 2 ஆகியோர் மரத்தை ஏன் வெட்டுறே? என்று கேட்டதற்கு எதிரிகள் மூவரும் குச்சிக்காரி மவனே, தேவடியா மவனே நாங்க அப்படித்தான் வெட்டுவோம் என ஆபாசமாக திட்டியும் மேலும், எதிரி 1 ஆனவர் தன் கையில் வைத்திருந்த அரிவாளால் அ.சா.1ஐ வீசித் தாக்க முற்படும்போது அந்த அரிவாள் பட்டியல் சாட்சி 1ன் வலது முன் காலில் வெட்டி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 2 வது எதிரி தனது கையில் வைத்திருந்த கருவை கட்டையால் பட்டியல் சாட்சி 1ன் இடுப்பில் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும், 3வது எதிரி அ.சா.1, 2 ஆகியவர்களை கருவை கட்டையால் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும், மேலும் எதிரிகள் மூவரும் சேர்ந்து அரிவாள், கட்டைகளை காண்பித்து உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று குற்றமுறு கொலை மிரட்டல் விடுதுள்ளார்கள் என்பதே அரசுத்தரப்பு வழக்காகும்.

WEB COPY

8. அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் 3 மற்றும் 5, 6 ஆகிய சாட்சிகள் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள். அ.சா.4, 7 பார்வை மகசரில் கையொப்பம் செய்த சாட்சிகள் ஆவார்கள். அ.சா.8, 9 மருத்துவர்கள். அ.சா.10 சிறப்பு காவல் உதவி ஆய்வாளர். அ.சா.11 ஆய்வாளர் ஆகியோர் சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். மேற்படி சாட்சிகளில் எதிரிகளை இந்த வழக்குடன் நேரடியாக தொடர்புபடுத்தக்கூடிய சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.3 மற்றும் அ.சா.5, 6 ஆகிய சாட்சிகள் ஆவார்கள். அ.சா.5 தனது நீதிமன்ற சாட்சியத்தில் தான் வீட்டிலிருந்தபோது சத்தம் கேட்டது. வெளியில் வந்து பார்த்தபோது பாட்டி கீழே விழுந்து கிடந்தார் என்றும், அவருக்கு வலது காலில் இரத்தம் வந்தது என்றும், அவர் எப்படி விழுந்தார் என்று தனக்குத் தெரியாது என்று, அரசுத்தரப்பு வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.6 தனது நீதிமன்ற சாட்சியத்தில் தனக்கு என்ன நடந்தது என்று தெரியாது என்றும் ஆனந்தவள்ளி கீழே விழுந்து கல்லில் அடிபட்டதாகச் சொன்னார்கள் என்றும் ஆனந்தவள்ளிக்கு ஏற்கனவே புண்கள் அதிகமாக இருக்கும் என்றும் அதில் விழுந்து தான் காலில் அடிபட்டது என்று

அரசுத்தரப்பு வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளித்துள்ளார். எஞ்சியுள்ள அ.சா.1 முதல் 3 வரை உள்ள சாட்சிகளில் அ.சா.3 தனது சாட்சியத்தில் அ.சா.1க்கும், ஆஜர் எதிரிகளுக்கும் சண்டை நடந்துகொண்டிருந்ததாகவும், தான் அதனை விலக்கி விட்டதாகவும், சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் தவறான வார்த்தைகளால் பேசியதாகவோ, அரிவாள், கட்டை போன்ற ஆயுதங்களால் தாக்கியதாகவோ அ.சா.1 மற்றும் 2ஐ கொலை மிரட்டல் விடுத்ததாகவோ எந்த சாட்சியமும் அளிக்கவில்லை.

9. எதிரிகள் மூவரும் பொது இடத்தில் மற்றவர்கள் அருவறுக்கத்தக்க வகையில் பேசியதாக இதச பிரிவு 294(பி)ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அ.சா.1 மற்றும் 2 ஆகியோர் தங்களின் நீதிமன்ற சாட்சியத்தில் எதிரிகள் மூவரும் பொது இடத்தில் மற்றவர்கள் அருவறுக்கத்தக்க வகையில் பேசியதாக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே, எதிரிகள் மீதான இதச பிரிவு 294(பி) யை பொறுத்தவரை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்றே இந்த நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

WEB COPY

10. அ.சா.1 முதல் 3 , எதிரிகள் மீது இதச பிரிவு 506(2)ன் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அ.சா.1 மற்றும் அ.சா.2ன் சாட்சியமும் எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்ததாக எந்த சாட்சியமும் இல்லை. எனவே, எதிரிகள் மீதான இதச பிரிவு 506(2)ன் கீழான குற்றம் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

11. இவ்வழக்கில் 2 மற்றும் 3 எதிரிகள் மீது இதச பிரிவு 323ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அ.சா.1 மற்றும் 2 ஆகியோர் 2 , 3 எதிரிகள் அ.சா.1 மற்றும் 2 ஐ கட்டையால் தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.1 அவரது சாட்சியத்தில் எதிரி இளம்வழுதி கல்லால் தன்னை தாக்கியதில் தனக்கு இடது தோலில் பட்டு வலி ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா1 எந்த மருத்துவ சிகிச்சையும் பெற்றதாக எந்த மருத்துவ மற்றும் ஆவண சாட்சியமும் இல்லை. புகார் மற்றும் போலீசார் கொடுத்த வாக்குமூலத்தில் 2வது எதிரி பட்டியல் சாட்சி 1ஐ கட்டையால் இடுப்பில் அடித்து காயம் ஏற்படுத்தியதாக அரசுத்தரப்பு வழக்கில் 2ம் எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில் 2ம் எதிரி அ.சா.1ஐ கல்லால் தாக்கியதாக அரசுத்தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் 3வது எதிரி அ.சா.2 மற்றும் 5ஐ கட்டையால் அடித்து சாதாரணகாயம் ஏற்படுத்தியதாக 3வது எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. 3வது எதிரி அ.சா.1 மற்றும் 2ஐ தாக்கியதாக எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை. அ.சா.1 மற்றும் 2 மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதாக எந்தவித

சாட்சியமோ, ஆவணமோ தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, 2, 3 எதிரிகள் மீதான இதச பிரிவு 323ன் கீழான குற்றம் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

12. 1ம் எதிரி மீது இதச பிரிவு 324ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சி 1 ஆனந்தவள்ளி என்பவர் சாட்சி விசாரணை துவங்குவதற்கு முன்பாகவே இறந்துவிட்டதாக அரசுத்தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது. பட்டியல் சாட்சி 1ஐ சம்பவ தினத்தன்று 1வது எதிரி அரிவாளால் வலது முன் காலில் வெட்டி, சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாக 1வது எதிரி மீது இதச பிரிவு 324ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அ.சா.1 அவரது சாட்சியத்தில் 1வது எதிரி தன்னை வெட்ட வந்தபோது தனது அம்மாவின் இடது காலில் பட்டு இரத்தக்காயம் ஏற்படுத்தியதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது சாட்சியத்தில் எதிரி இளவரசன் வீசிய அரிவாள் தனது மாமியாரின் இடது காலில் பட்டு காயம் ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1ற்கு வலது காலில் காயம் ஏற்பட்டதாக அரசுத்தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் பட்டியல் சாட்சி 1ன் இடது காலில் அரிவாளால் வெட்டி காயம் ஏற்பட்டதாக அரசுத்தரப்பிற்கு முற்றிலும் முரணாக சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும் அ.சா.8 மருத்துவர் தனது சாட்சியத்தில் குறுக்கு விசாரணையில் “ காயம்பட்ட நபருக்கு ஒழுங்கற்ற முறையில் காயம் இருந்தது. மேற்படி காயம் ஒழுங்கற்ற கற்கள் போன்ற ஒழுங்கற்ற பொருளால் ஏற்பட்டது என்று சொன்னால் சரி தான். மேற்படி காயம் கற்கள் நிறைந்த இடத்தில் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். அரிவாளால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்று சொன்னால் சரிதான் ” என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.8ன் சாட்சியத்தின்படி அ.சா.1 ற்கு இடது காலில் அரிவாளால் காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்று தெரியவருகிறது. மேற்படி அ.சா.8 மருத்துவரின் சாட்சியம் அரசுத்தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மேலும் அ.சா.1ன் குறுக்கு விசாரணையில் 1வதுஎதிரி இளவரசனின் சித்தப்பா அன்பழகன் என்பவருக்கும், அ.சா.1ற்கும் ஊராட்சி மன்ற தலைவர் பதவி தருவதில் விரோதம் இருந்து வந்துள்ளது என்று தெரிய வருகிறது. மேலும், அ.சா.7 ன் முதல் விசாரணையை பரிசீலனை செய்து பார்க்கும்போது 02.01.2016 அன்று நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்திற்கு 4 நாட்கள் காலதாமதமாக 06.01.2016 அன்று காவல் நிலையத்திற்கு தகவல் அளித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கால தாமதத்திற்கு முறையான ஏற்றுக்கொள்ளத்தக்க காரணம் இல்லை. மேற்படி கால தாமதம் அரசுத்தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

WEB COPY

13. மேலும், இந்த வழக்கில் எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் அரிவாள், கட்டை போன்றவை கைப்பற்றப்படாததும் அரசுத்தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. எனவே, மேற்படி சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து அரசுத்தரப்பில் எதிரிகள் மீதான குற்றங்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

14. முடிவாக, 1வது எதிரியை இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)ன் கீழும், 2, 3வது எதிரிகளை இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து 1 முதல் 3 எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

15. இவ்வழக்கில் தடயப் பொருள்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2017ம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

WEB COPY

ஒம்/= சி. சிவக்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், வலங்கைமான்.

1. <u>அரசு தரப்பு சாட்சிகள்</u>

அ.சா.1 = சின்னையன்.
அ.சா.2 = தமிழ்செல்வி
அ.சா.3 = சாந்தி
அ.சா.4 = ஜெயராமன்
அ.சா.5 = சசிகலா
அ.சா.6 = முத்துலெஷ்மி
அ.சா.7 = சோமு
அ.சா.8 = கரிகாலன், மருத்துவர்
அ.சா.9 = சையதுராஜ், மருத்துவர்
அ.சா.10 = முத்துகிருஷ்ணன், சிறப்பு உதவி ஆய்வாளர்
அ.சா.11 = T.K.M. பெரியார் ஆய்வாளர்.

2. <u>அரசுத்தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்</u>

அ.சா.ஆ.1 = 06.01.2016 = புகார் வாக்குமூலம்
அ.சா.ஆ.2 = 07.01.2016 = பார்வை மகசரிலுள்ள அ.சா.4ன் கையொப்பம்.
அ.சா.ஆ3 = 07.01.2016 = பார்வை மகசர்
அ.சா.ஆ.4 = 07.01.2016 = விபத்து பதிவேடு
அ.சா.ஆ.5 = 02.01.2016 = காயச்சான்றிதழ்
அ.சா.ஆ.6 = 06.01.2016 = முதல் தகவல் அறிக்கை
அ.சா.ஆ.7 = 07.01.2016 = மாதிரி வரைபடம்.

3. <u>எதிரிதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> = இல்லை.

4. <u>சான்று பொருள் =</u> இல்லை.

ஒம்/= சி. சிவக்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், வலங்கைமான்.

// உண்மை நகல் //

WEB COPY

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், வலங்கைமான்.

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
<u>மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவாரூர்,</u>